சிவமயம்.

பதி துணை.



சோமவாரப்பணிவிளக்கம்.

இஃது

புதுவயல், நா. அ. ச.

சண்முகஞ்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

ஷை யூர்

தேவசேனாபதி

திருவடிக்கைங்கரிய சபையாரால்

மதுரை வடக்குமாசிவீதி,
ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திர சாலையிற்,
பதிப்பிக்கப்பெற்றது.

விரோதிகிருது-ஸு ஐப்பசி-மீ 23-உ

1911.

24/6.

உ

சிவமயம்

கணபதி துணை.

சோமவாரப்பணிவிளக்கம்.

காப்பு.

மதிநதிச் சடிலன்விரை வனப்பர னுமைசெய் நீலக்
கதிதரு மயிலோன்மற்றைக் கடவுளரடிநா மேத்திப்
பதிபெற வியற்றுஞ் சோமவாரநற் பணிமே லோங்கத்
துதிமிகுது திக்கைவேழன் றுணையடி தொழுதுவாழ்வாம்

வீரசேகரர்.

விரைசூழ்ஞாலத் தெம்பான் மேவினெவ் வினைஞரேனும்
விரையோ வலியாதான்வ லென்னவெவ் வினைசெய்விரன்
விரைபாற் சேயாயிங்ஙன் மெலிவுறு தளித்தவெந்தை
விரைவிரையன் பொற்றாள் விரைமலர் விரும்பிவாழ்வாம்.

உமையம்மை.

நமையாம்ப லொன்றி நலியாதருளு நயனமுன்றுன்
கிமையாம் பரிவ்ளர் சேயிபமாமுக னின்றவன்னை
யமையாம்பற் றேளருஞ் செவ்வாயணங்கின் வளைகைவள
ருமையாம் பிகையிருபாதாம்புயமனத் துன்னுகவே.

விநாயகர்.

மஞ்சரண மன்னவளைகை மான்மருக னித்தன்
குஞ்சரமுக த்தனடி கொண்டுதொழு வோர்தஞ்
செஞ்சரண மேத்தியுயர் சிவபத மடைந்தே
தஞ்சலய னத்தொழிறு டைத்தினி திருப்பாம்.

சுப்பிரமணியர்.

தந் தன தன தன தந் தன தன தன
தந் தன தன தன தன தான.

மத்தக மரைசிமி ழுத்திரி முடிகல
சத்தொடு கிணைமொளிர் வளையேயும்
மட்டவிர் மலர்தர ளத்தொளிர் முலைபொரு
டெட்டியெ காமுத விடுமாதர்
புத்தமு தினியசு வைக்கனி நறியபா
லற்றமில் கழைரச மமிர்தேனும்
பொற்கினி யனிவளர் கொக்குறை குயில்குர
கச்சொலி னசைகொடு டலநாளும்.

அத்திர விழியுட றைத்திட மெலிவுறு
மத்தர்த முறவுகொ டலைவேனோ
அற்பக நினது துணைப்பத மிறையெனு
மத்தநன் மலர்கொடு பணிமேவ
வித்தக மதிமுடி யத்தன தழல்விழி
யுற்பவ குகவருள் புரிவாயே
விச்சைய ரமரர்மு னித்தவர் பணியும்வி
ரைப்பதி தனிலுறை பெருமாளே.

திருத்தொண்டர்.

பொற்றிதலைக் கனதனப்பூம் பாவையதா வென்பாக்கும்
புகலி மன்னன்
கற்றுணையாக் கடல்கடந்த கவிபரயர் பரவையகன்
களிக்க நாளும்
நற்றுணையா மாரூரர் நரிபரியாப் பேரன்பின்
நாரி யோடும்
பெற்றமிவர்ந் தார்வரச்செய் பெரியவர்மற் றடியார்புகழ்
பேசி வாழ்வாம்.

ஆசிரியப்பா.

நீர்மலிபரவைச் சிறைநன்குடுத்த
பார்மகளாரப் பயோதரநிகர்க்கும்
மதிதவழ்குடுமிப் பொதியமாநிதியக்
குன்றமுநீள்கொடுங் குன்றமும்பொலியுங்
காண்டகுசீர்சால் பாண்டிநன்னாட்டிற்
கைதவரிழைத்த செய்தவமென்ன
உலகீரேழும் ஒருங்குடனளித்த
மின்னினுண்ணிடையாள் கன்னியாயாட்சி
கோண்டராதளித்த மாண்டகுமதுரைப்
பதியின்குணபால் நதிவருகயல்கள்
உந்தியங்கெழுந்து கந்தியின்மிடறு
போழ்ந்தந்தரநீள் புயல்வயிறீர்ப்பத்
தெள்ளமுதொழுகிக் கள்ளவிழ்கமலப்

பழனம்விளையும் பண்பிற்றொருசார்
விண்டொடநிவந்த தண்டலையாங்கில்
அரும்பமராரும்பதச் சுரும்பர்பாடக்
கோகிலநங்கை எழிசைமிழற்ற
எஞ்சலின்றன்மறை யஞ்சுகமுரைப்ப
மயிரமிபற்றம் நடனம்மொருசார்
கழைபின்றடவையுள் மழைபொருகவரிகள்
புக்குத்தன்சுவை இக்கிளைக்குதட்டிக்
கருப்பிழுமிழும் பெருவிலமணியைச்
சிறமியர்வாரிச் சிற்றிற்சோறெனக்
குழிசியிட்டயருங் கொள்கைத்தொருசார்
கரைபொருகமலம் விரவியகமலப்
பாசடைபயிலும் பறவைகளணவித்
தங்கருவென்னக் கழீஇச்சிறகரால்
வெஞ்சிலைதகாக்கும் வெள்வளையுயிர்த்த
முத்தொளிக்கனிசூழ் சித்திரவாம்பற்
போதவாய்விள்ளும் பொற்புடைத்தொருசார்
முத்திவெட்டிக் கித்தரையெழிலி
பெய்யுமாறருளுந் துய்யர்களாய
அந்தணர்வாழும் மந்திரமொருசார்
இறுதியில்லவன்சொல் சுருதியைவேத
பாரகர்பயில்கல் லூரியுமொருசார்
வேதநுண்பொருடேர் அறிவருணர்த்தர்

மேதகுசாலை மிளிருமங்கொருசார்
சாதமிறப்புத் தவிர்க்குந்திராவிட
வேதம்பயில்மடம் விளங்கிடுமொருசார்
ஆறணிசடையா னுமிவரென்ன
நீறணிபுராமும் பாறுமைம்புலனை
யொக்கச்சினக்துநல் லக்கம்புனைந்து
கற்றாசரையிற் பொற்புறவிரித்தே
மோனம்புரியும் ஞானியர்மேய
வைதிகமடமு மன்னுமங்கொருசார்
கடியார்கொன்றை முடியான்றாள்சேர்
அடியாரடியை முடியுறத்தாங்கித்
தனைமறந்தவர்பூ சனைபுரிந்தின்னற்
கடற்புகாதின்பக் கடற்புகுந்தரிய
நிலைபெறெனுங்கரை உலைவிலாதேறிச்
சித்தங்களித்தம ருத்தமர்குழாஞ்சூழ்
மைதீர்சைவ மடாலயமொருசார்
திருத்தமார்புலவர் நிருக்தனுமுமைசேர்
அருந்தன்சீர்ப்பா வருத்தம்பகரும்
திருக்கிளரிடம்பல விருக்குமங்கொருசார்
கின்னரரென்ன நன்னரம்புழக்கும்
வசையில்சீர்த்தி இசைநாவலர்கள்
சொன்னறவொழுகும் நன்னகரொருசார்
வேதியராதுலர் வேதனையாருடற்

றி நிரந்தகர்க் காதரத்தளிக்குநற்
சித்திரவன்ன சத்திரமொருசார்
சொல்லரும்புலவர் இல்லறங்குறித்துச்
செப்பியநெறியி னொப்புறநாளுந்
தென்புலத்தார்முத லைம்புலத்தாரை
யோம்பினராய்ப்புகழ் மேம்படவொழுகும்
இருபிறப்பாள ரேமுதனான்கு
வருணத்தவர்வாழ் மறுகும்மரசர்
கோயிலுஞ்செங்கட் குஞ்சரநிரையும்
வாயிலுமரம்பையர் வனப்பிற்கொவ்வாப்
பணிசேரல்குற் கணிகையர்தெருவும்
பத்தியாய்மாடம் நித்தியம்பொலியும்
நத்தினமுகளுஞ் சித்திரவயல்சூழ்
இந்திரநகர்க்கொப் பெத்தரைபுகல்வேம்
வானோர்பரவும் ஆறுலகின்றால்
சாத்திரமுணர்ந்தபல் நாத்திரட்சேடன்
ஒத்துணர்நாவாற் சாற்றுதற்கெளிதோ
மாகம்படிகார் மேகங்கண்படு
தாயிரகிலிகை மேவுமொண்சிகரி
அரைசூழும் வீரைநகர்க்கண்
கிராதர்கள்பெருமான் தராதலமுற்றத்
தள்ளைகருவிற் பிள்ளையாயலமரா
தேடித்தினிதாண்ட கடுப்பொலிமிடற்றெந்
சித்தத்தளிபுறை யுத்தமனாரத்

தாரியன்மார்பச் சூரியன்வெந்நோய்
அரித்தவன்புரத்தை யெரித்தவன்சிரித்து
சசிதவழ்சடிலன் உசிதனுட்கிடந்த
ஐயந்திரப் பைதழைவிரையைத்
தட்பநறுந்தேன் முட்புறவாக்கிக்
காட்டியசங்கத் தோட்டினனுடையாம்
பிகையொடுவளருந் தகைசேர்தளியில்
அமரர்கள்வாழப் பமரமார்நீபத்
தார்ப்புயவேளாய்ச் சூர்ப்புயல்முடித்த
வேலன்னுமையாள் பாலன்றிருமால்
மருகன்னெழிலார் முருகன்வள்ளி
காந்தன்கனிவாய்ச் சேந்தனிமையாம்
பரிதிகழ்சமர புரிவளராறு
முகன்சண்முகனரன் மகனுண்டலையுயர்
கொடியான்சமருக் கொடியானடியார்
சிந்தைக்கினியநற் கந்தன்காங்கெயன்
புகர்மாத்துணைவனெண் டகர்வாகனக்குகன்
ஆறிருநயனத் தோகத்தெந்தைபல்
லாயிரநாமச் சேய்மனமாதிக்
கரியவன்செய்ய இருவியார்புனத்திற்
கனியநாஞ்சுப்ர மணியற்குயாமனை
கருச்சிதைத்துயநல் விருச்சிகமதியிற்
றுமம்புனைகுழற் சீமந்தனிமுனம்

அரவணிந்தருளும் பரமனுக்கன்போ
டாற்றிபதென்னைப் போற்றாஞ்சோம
வாரநன்னாளிற் சேரமைமுகிலைப்
பருங்கடாவென்னக் கருங்கான்மள்ளர்
சிறிப்பிடித்தங் கேரிற்பிணைத்தே
யிசிவன்பாசம் ஈசியிற்கோத்துச்
சாலக்கோலா லெலப்புடைத்தே
பூமுதாகுளுக்க வேயுழுங்கழனிப்
பைங்கூழ்வளர்க் கொங்கவிர்பொழில்வாய்
கதலிபலாமா முதலியகனிகள்
உடைந்துபல்லாறாய் மிடைந்தெழுமந்த
மதவயல்பாயும் புதுவயல்நகர்வாழ்
மந்திரியைப்பொருஉஞ் செந்திருவுடையார்
உடுபதிமரபில் வடுவிலாதுதித்தோர்
மரகதக்களிற்றைக் கரமலர்கொண்டு
விரவிபேணாளும் பரவுநல்லடியார்
வேண்டியவளிக்கும் பாண்டிநாட்டாசான்
தாள்சிரந்தாங்கும் ஏழ்நகரத்தார்
என்னவரும்புகழ் மன்னியகீர்த்தி
இப்பர்களாயநற் செப்பருங்குணச்சீர்
அகத்தார்மார்பர் இகத்தும்பரத்தும்
எய்தற்கரியபே ரின்பமெய்தக்
கருதாவாழைக் கனிபலவின்கனி

சூரபலந்திரட் டாதுமாதுளைகற்
சூரமொடினிய நாரநன்கனிநெய்
சயமிளங்கன்றுப் பயமிளநீர்தநி
நேயம்வெறியார் நோயமிக்குயர்தேன்
இன்னனகொண்டங் கன்னவற்காட்டியும்
கான்மிகுமாரம் மான்மதம்பூநி
நிலவவணிந்துகோங் கிலவுசெய்யலரி
குங்குமமுருகார் பங்கயந்தளவம்
தாதகிபாடலஞ் சூதமாவிளமின்
வகுளமந்தாரம் மிகுவிரைச்சன்பகம்
வெட்சியுடன்மரு வச்சகந்தவள
மல்லிகையுங்குட மல்லிகையுங்கல்
லாரமுநீப வாரமுமெழின்முத்
தாரமுமரதன வாரமும்புனைந்தே
பாளிதநாரி கேளநற்பாகடை
யாதனைகொய்யநி வேதனஞ்செய்வித்
தரஹரபவஹர குருபரகுகனே
வரமருடரமர கதமயில்வருவாய்
மாமறையுணராச் சேமவைப்பேமலர்ச்
சரணெனமுக் கரணங்களானும்
வழிபடுந்தொண்டர் குழுவினராய
தேவசேனாபதி திருவடிக்கைங்கரிய
சபையாரென்றும் இசையுறவாழ்க
சோமவாரப்பணி நாமவேற்கரன்றண்

அருளையருளெம் அதனுற்பிறவும்
பெருகுங்கதியுந் தருமாற்றமர்காள்
இருமையுமளிக்கும் பெருமையாரிந்தச்
சாக்கைகர்க்கண் ஆக்கமொடடைந்து
தண்டானந்தங் கொண்டகங்களித்தே
அருளானந்தக் கடற்படிந்து
புருடார்த்தநான்கும் பொருந்துதிர்மாதோ

விருத்தம்

கூரயினேர் விழியுமைபாம் பிகைபதமு மரன்சரணுங்
கோம்பொன் றேந்துங்
காரருசி னூபுரஞ்சேர் கான்மலருங் குறமாது
கனிவாய் வேட்குஞ்
சீரலைவாய் வளர்கந்தன் சேவடியும் விருச்சிகமாந்
திங்கட் சோம
வாரதினத் தொழுமடியார் மலரடிநா மெப்போதும்
வணக்கஞ் செய்வாம்.

முற்றிற்று.